மதுபான பர்மிட்டுகள்.

* 775 கேள்வி.—திரு எம். எஸ். மணி : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் சீமைச் சாராயம் குடிக்க எத்தனை பேருக்கு பர்மிட்டு வழங்கப்பட்டது ?

(இ) அவர்கள் மூலமாகப் பர்மிட்டு இல்லாதவர்களும் குடிக்கிறார்கள் என்று ஏதேனும் புகார் அரசாங்கத்துக்கு வந்துள்ளதா? அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : (a) A statement [a] showing the number of persons to whom permits for consumption of foreign liquor were issued from 1st January to 24th May 1962 is placed on the table of the House.

(b) No, Sir.

அரிசனக் காலனி (வளவனூர்).

* 776 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :
திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : } கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரம் தாலூகா வளவனூரில் அரிசனங்களுக்கு மனை வழங்குவதற்கு அவர்களிடமிருந்து எவ்வளவு பணம் எப்போது வாங்கப்பட்டது ?

(இ) அவர்களுக்கு மனைக் கட்டுகள் கொடுக்கப்பட்டனவா ?

(உ) வளவனூர் காலனி வாழ் மக்களுக்கு மனைக்கட்டு வழங்கும் விஷயத்தில் காலதாமதத்துக்குக் காரணமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Rupees one thousand on 25th January 1958;

(இ) No, Sir; and

(உ) An extent of 9·59 acres of lands was originally selected for provision of house-sites to the Harijans of Valavanur. Owing to the strong objections of the land owners and the interested persons to the acquisition, alternative sites in Kudumiyankuppam village were later selected for the purpose. The land owners and the villagers object to the acquisition of these sites also. The validity of their objections are under examination.

அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை.

* 777 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் அரிசன நல இலாக்காவின் மூலமாக அரசாங்க உதவித் தொகை பெற்ற அரிசன, பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவ மாணவிகள் எத்தனை பேர் ? மாவட்டவாரியாக ?

a Printed as Appendix II on page 363

[30th July 1962

(இ) விடுதிகளில் வசிப்பவர்கள் எத்தனை பேர் உதவித் தொகை பெற்றுள்ளவர்கள்? எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

### அரிசன நலப் பள்ளிகள்

*778 கேள்வி.—திரு. வெ. இரா. பெரியண்ணன் : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரிசன நல இலாகாவால் நடத்தப்படும் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்ற உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

### இலங்கை அகதிகள்

*779 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து நாடு திரும்பியவர்களுக்குக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு உதவி செய்வதாக மத்திய சர்க்கார் இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்தார்களா?

(இ) அதன் விவரமென்ன?

(உ) அந்த உதவியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இந்த அரசாங்கம் என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டன?

(எ) திருச்செந்தூர் தாலுக்காவில் பிடானேரி, எழுவரை முதலிய கிராமங்களில் இதற்குரிய நிலங்கள் பரிசீலிக்கப்பட்டனவா?

THE HON. SRI P. KAKKAN : (அ) No, Sir;

(இ) Does not arise.

(உ) The question of forming land colonisation societies for the settlement of Ceylon repatriates with usual Central assistance for land reclamation has been under consideration of this Government but suitable blocks of lands could not be located; and

(எ) The possibilities are being examined.

### பம்புசெட்டுகள் (மின்சார இணைப்பு)

*780 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வாலாஜா தாலுகா மேல்பாடி பிர்க்கா மக்களிடமிருந்து பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் வந்தனவா?

---

[a] Printed as Appendix III on pages 864–865